## விவசாயிகளின் வாழ்க்கை மேம்பட பல்வேறு திட்டங்களைத் தீட்டியது கழக அரசு!

# உளுந்தூர்பேட்டை - அதையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் வேண்டும்!

## சட்டப்பேரவையில் ஜி.ஆர்.வசந்தவேலு பேச்சு!

சென்னை, செப்.6-

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் உளுந்தூர்பேட்டை தொகுதி ஜி.ஆர். வசந்தவேலு பேசுகையில் விவசாயிகளின் வாழ்க்கை மேம்பட பல்வேறு திட்டங்களை தீட்டியது கழக அரசு என்றும் உளுந்தூர்பேட்டை - அதையூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.**

சட்டப்பேரவையில் உளுந்தூர்பேட்டை கழக உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகின்றேன். சாதாரண சாமானியத் தோற்றத்தோடு தம்பிமார்களை ஒருங்கிணைத்து அசாதாரணமான மாற்றத்தை ஏற்படுத்திய மகத்தான தலைவர், இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகின்றேன். அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்று கோடிக் கணக்கான தம்பிமார்களை வழிநடத்திய நவீன தமிழகத்தின் சிற்பி, இந்திய ஒன்றியத்திற்கே வழிகாட்டும் முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து model-களுக்கும் மூத்த model, முன்மாதிரி model, திராவிட மாடல்தான் என மெய்ப்பித்துக்காட்டிய எங்கள் கழகத்தின் தாயுமானவர். (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுத்திறனாளிகள், மகளிர், ஏழையெளியோர் மாணவர்கள், அனைவரின் இதயத்திலும் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கின்ற, விளிம்புநிலை மக்களின் நம்பிக்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், முன்னாள் முதலமைச்சர் திராவிட நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் நம்பிக்கை, இளையோர்களின் வழிகாட்டி, தமிழ்நாட்டின் உரிமைப் போராட்டத்தின் ஈட்டி முனை, தமிழ்நாடு புதுவாழ்வு பெற அநீதிக்கு எதிராகப் போராடும் ஆற்றல்மிகு மறவர், குரலற்றவர்களின் குரலாய் ஒலிக்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அன்பிற்குரிய அண்ணன் கே.என்.நேரு அவர்களையும் வணங்குகின்றேன். கடந்த ஆட்சியில் பொறுப்பு அமைச்சராக இருந்து, உழைப்பவரே உயர்ந்தவர் என்ற உயரிய வழியில் எங்களை நடைபோட வைத்த எங்கள் வழிகாட்டியாய் இருந்து, எங்கள் கழகத்தின் கொறடா எ.வ. வேலு அவர்களையும் வணங்குகின்றேன். எனது வெற்றிக்கு உழைத்த மாவட்டச் செயலாளர் பாசமிகு சகோதரர் திரு. வசந்தம் க. கார்த்திகேயன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் உளுந்தூர்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், உணர்வோடு உழைத்த ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களுக்கும், கழக நிர்வாகிகளுக்கும், கிளைக் கழகச் செயலாளர்களுக்கும், booth agent உள்ளிட்ட அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும், கழகத் தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், தோழமை அமைப்புகளுக்கும் எனது வாழ்நாள் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். எனது வெற்றிக்கு உறுதுணையாக இருந்து. எனது வாழ்வின் துணையாகவும் இருக்கின்ற எனது அருமை மனைவி திருமதி குணசுந்தரி அவர்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்த எனது மகன்கள் மருத்துவர் சந்திரபோஸ், பொறியாளர் திரு. ராஜசேகர், எனது அன்பு மகள் மருத்துவர் திருமதி ஸ்ரீபாக்கியா, எனது மருமகள் மருத்துவர் திருமதி சுவேதா, எனது பேரப்பிள்ளை வேலினி உள்ளிட்ட எனது குடும்பத்தார்கள். உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது நன்றியைக் கூற கடமைப்பட்டுள்ளேன். நடுநிலையுடனும், மாண்புடனும் இந்த அவையை வழிநடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவரான உங்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்

தொழுதுஉண்டு பின்செல் பவர்.'

என்றார் வள்ளுவர்.

'விவசாயம்தான் நாட்டின் முதுகெலும்பு' என்றார் மகாத்மா காந்தி. 'விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும்' என்றார் பேரறிஞர் அண்ணா. கடனிலே பிறந்து, கடனிலே சாகின்றவர்கள்தான் விவசாயிகள்' என்று கூறப்படுவதும் உண்டு. 'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக்கூட மிஞ்சாது' என்பது முதுமொழி. எங்கள் நடுநாட்டு எழுத்தாளர் கண்மணி குணசேகரன் என்பவர் விவசாயிகளைப் பற்றி எழுதிய வரிகளில் ஒரு சில வரிகளைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

'மல்லாட்டையில நல்ல பயிற வித்துடுவாரு நன்னி பயிருதான் காணமாடச் சொல்லுவாரு; கம்புல நல்ல கம்ப வித்துடுவாரு பொட்டுக் கம்பத்தான் கூழாக்க வீட்டுக்குக் கொடுப்பாரு; முந்திரிக் கொட்டையில நல்ல கொட்டைய வித்துடுவாரு சவலக் கொட்டையத்தான் பாயாசத்துக்குக் கொடுப்பாரு; நெல்லிலும் துவரையிலுங்கூட அப்படித்தான்; ஆனா, ராத்திரியில, படுக்கறப்பத்தான் அப்பா சொல்லுவாரு; "என்ன வித்து என்ன பண்றது; நானும் எப்படி எப்படியோ குடும்பம் நடத்திப் பாக்கிறேன் கடனும் அடையல; கவலயும் தீரல" என்று. இதுதான் விவசாயிகளின் நிலை என்றார் எழுத்தாளர்.

எனவேதான், விவசாயக் கடன்களை அறவே தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், விவசாயிகளுக்குச் செய்த நன்மைகளில் ஒரு சிலவற்றை காலத்தின் அருமை கருதி சுருக்கமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

விவசாயிகள் காப்பாற்றப்படுகின்ற வகையில், 1970-ல் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் அரசு நில உச்சவரம்பை 30 ஏக்கரிலிருந்து 15 எக்கராகக் குறைத்தார். இதன் காரணமாக, 1 இலட்சத்து 78 ஆயிரத்து 880 ஏக்கர் உபரி நிலம் கைப்பற்றப்பட்டு, 1 இலட்சத்து 37 ஆயிரத்து 236 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலத்தை வழங்கியவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞரை பாராட்டிய மணலி கந்தசாமி!

1971-ல் இந்தியாவிலேயே முதன்முதலாக குடியிருப்பு அனுபவதாரர்கள் சட்டம் கொண்டு வந்து, குடியிருக்கும் மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். இந்தச் சட்டம் குறித்து முதுபெரும் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மணலி திரு. கந்தசாமி அவர்கள், பல ஆண்டுகளாக இரத்தம் சிந்தியும் நாங்கள் சாதிக்க முடியாத ஒன்றை ஒரு துளி மையினால் சாதித்துக் காட்டியவர்தான் கலைஞர் என பாராட்டியது வரலாறு (மேசையைத் தட்டும் ஒலி)

### விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தந்தவர் கலைஞர்!

1974-ல் ஒன்றிய அரசு நெல்லுக்கு நிர்ணயிக்கும் ஆதார விலையுடன், கூடுதல் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாகக் கொண்டு வந்தவர் கலைஞர். 1990-ல் உலக வரலாற்றில் முதன்முறையாக விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினைக் கொண்டு வந்து, இலட்சக்கணக்கான விவசாயிகளின் குடும்பத்தில் வெளிச்சத்தைத் தந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1997-ல் கோலப்பன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் வழங்கிய பரிந்துரையின்படி தமிழ்நாடு நந்து வைத்தவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். 2006-ல் 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களின் 30 ஆண்டுக் கடன் சுமையை 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்தவர் கலைஞர் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

### திராவிட மாடல் ஆட்சியில் விவசாயத்திற்கு தனி பட்ஜெட்!

1 இலட்சத்து 78 ஆயிரத்து 462 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா 2 ஏக்கர் வீதம் நிலங்களை வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் முதன்முறையாக விவசாயத்திற்கென தனி நிதிநிலை அறிக்கையை வெளியிட்டவர் எங்களது தலைவர் திராவிட மாடல் நாயகர் என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



கடந்த 2021-2022 திராவிட மாடல் ஆட்சியில் 1 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார். மேலும், அதனைத் தொடர்ந்து, 2022-2024 வரை. கூடுதலாக 69,000-க்கும் அதிகமான விவசாயிகளுக்கு மின் இணைப்புகள் வழங்கினார் என்பதை பெருமையோடு இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதேபோல, பட்டதாரி இளைஞர்களை வேளாண் தொழில்முனைவோராக்கிட, ஒருவருக்கு 1 இலட்சம் ரூபாய் மானியம் கொடுக்கப்பட்டு, வேளாண் பொருட்கள் உற்பத்தியில் புதிய சகாப்தம் படைத்த அரசு திராவிட மாடல் அரசு.

விவசாயிகள் பழைய மோட்டாரை மாற்றிவிட்டு, புதிய மோட்டார் வாங்க பத்தாயிரம் ரூபாய் மானியம் வழங்கியவர்தான் திராவிட மாடல் நாயகர். அதேபோல, நான் முதல்வன், புதுமைப் பெண், விடியல் பயணம் போன்ற பல திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். காலத்தின் அருமைகருதி அடுத்து எனது தொகுதியின் கோரிக்கைகள் சிலவற்றை மட்டும் படிக்கின்றேன். மற்ற கோரிக்கைகளையும் படித்ததாகக் கருதி பேரவை குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ளும்படி பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது மாவட்டம் கள்ளக்குறிச்சி. நெய்வேலி அனல் மின் நிலையம், சுரங்கம் இருக்கின்ற பகுதிக்கு அருகாமையில் உள்ளது. அந்தச் சுரங்கத்தின் காரணமாக எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 20 கிராமங்கள் நிலத்தடிநீரால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சுரங்கத்தில் அதிகளவு நீர் உறிஞ்சப்படுவதால், எங்கள் பகுதியில் இருக்கும் நிலத்தடி நீர் அங்கே சென்று விடுவதால், இங்கே நிலத்தடி நீர் மிகவும் பாதிக்கப்பட்டு, குடிதண்ணீரு க்குக் கூட மிகக் கஷ்டமான ஒரு சூழ்நிலையில் எங்கள் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 20 கிராமங்கள் இருக்கின்றன.

கடலூர் மாவட்டத்தில் இருக்கின்ற கிராமங்களும் இதேபோன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அங்கு என்ன செய்கிறார்கள் என்றால் CSR, DMF என்ற நிதியைப் பயன்படுத்தி அந்தக் கிராமத்திற்கெல்லாம் கடலூர் மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இருக்கின்ற இந்த 20 கிராமங்களுக்கும் கொடுத்ததே கிடையாது. எனவே அந்த நிதியை எங்கள் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நான் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு இந்த அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### முந்திரி இறக்குமதியை தடை செய்ய வேண்டும்!

அதேபோன்று, எங்களுடைய பகுதி முந்திரி விவசாயிகள் நிறைந்த பகுதி. இந்த முந்திரிகள் எல்லாம் கடந்த தானே புயல் காரணமாக மிகுந்த பாதிப்பு ஏற்பட்டது. அவற்றையெல்லாம் விவசாயிகள் இழந்து, மீண்டும் அதிலிருந்து மீண்டு புதிதாக மரங்களை வைத்து, விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த விவசாயத்திலிருந்து கிடைக்கின்ற முந்திரிக் கொட்டைகளை விற்பதற்கு கஷ்டப்படுகிறார்கள். காரணம் என்னவென்றால் முந்திரிக் கொட்டைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். அப்படிச் செய்யும் போது, இங்கிருக்கக்கூடிய உள்ளூர் முந்திரிக் கொட்டைகளை வாங்குவதற்கு, விலைபோவதற்கு இல்லாமல் இருக்கிறது. எனவே, அப்படி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை இந்த அரசு தடை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இரண்டு போகம் (சம்பா போகம், குறுவை போகம்) நெல் விளைகிறது. ஆனால், சம்பா போகத்தில் மட்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்கிறார்கள். குறுவைப் பருவத்திலும் திறக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கின்றேன்.

### ராகவன் வாய்க்காலை தூர்வாரி சீரமைத்திடுக!

எங்கள் பகுதிக்கு பாசன வசதியைத் தரக்கூடிய ராகவன் வாய்க்கால் உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட விழுப்புரம் மாவட்டத்திலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலும் கிட்டத்தட்ட 58 ஏரிகளை நிரப்பக்கூடியது. இந்த ராகவன் வாய்க்காலை தூர்வாரி சீரமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று கிளை வாய்க்காலான இருந்தை வாய்க்கால்களையும், 8 கிலோ மீட்டர் நீளமுள்ள அரசூர் வாய்க்கால்களையும் தூர்வாரி சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்பெண்ணையாற்றில் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக சுந்தரேசபுரம் என்ற இடத்தில் கிணறு அமைக்கப்பட்டு தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் தண்ணீர் எங்கள் உளுந்தூர்பேட்டை தொகுதியின் வழியாக தியாக துருகம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம் போன்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்தத் தண்ணீர் பாதையில் ஜி.அரியூர் என்ற ஊரில் sump ஒன்று அமைக்கப்பட்டு, அதிலிருந்து pipeline அமைத்து எங்கள் உளுந்தூர்பேட்டை தொகுதிக்குட்பட்ட காட்டுஎடையார் போன்ற பகுதிக்குத் தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. (மணியடிக்கப் பெற்றது)

அதையே மேலும், விரிவாக்கம் செய்து, தானம், மயிலாடும்தாங்கல், பல்லவாடி, நரிப்பாளையம், எறையூர், கொம்மசமுத்திரம், பிடாகம் ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிதண்ணீர் வழங்கிட வேண்டுமென இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

### அரசு மகளிர் கல்லூரியும் பொறியியல் கல்லூரியும் அமைத்திடுக!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கோரிக்கை. எங்கள் பகுதிக்கு அரசு மகளிர் கல்லூரியும், ஒரு பொறியியல் கல்லூரியும் வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

களமருதூர் அரசு மேல்நிலைப் பள்ளி, 1500 மாணவர்களைக் கொண்டது. அதனைப் பிரித்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, திருநாவலூர் பெரிய மேல்நிலைப் பள்ளி சுமார் 1,500 மாணவர்களைக் கொண்டது. அதையும் பிரித்து பெண்கள் மேல்நிலைப் பள்ளி உருவாக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று உளுந்தூர்பேட்டை பகுதி, செவலை ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாய்ப்பளித்த எங்கள் கழகத் தலைவருக்கும், எங்கள் அய்யா கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன்.

### தொகுதிக் கோரிக்கைகள்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட கீரிமேடு ஊராட்சி, மாரியம்மன் கோயில் அருகில் உள்ள குடிதண்ணீர் குளத்தினை தூர்வாரி புனரமைக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை அருகில் தற்பொழுது கட்டப்பட்டு வரும் தோலில்லா காலணி தொழிற்சாலையில் உளுந்தூர்பேட்டை தொகுதியைச் சார்ந்த படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாதந்தோறும் நடைபெறும் விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில் கலந்துகொள்ளும் விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை மற்றும் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த கிராம ஊராட்சிகளில் MGNREGS 2025-2026 நிதி மற்றும் DRDA மூலம் மாவட்ட ஆட்சியரால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, நிலுவையில் உள்ள பணிகளையும், இன்னும் துவங்கப்படாமல் உள்ள பணிகளையும் மேற்கொள்ள வேண்டும். சட்டமன்ற தேர்தலுக்கு பின்பும் நடைபெற்று முடிந்த வேலைகளுக்கு பில் (M-Book அனைத்தும் எழுதாமலும், NMR ஜென்ரேட் பண்ண முடியாமலும் உள்ளது. அதற்குரிய இணையதளமும் முடக்கப்பட்டுள்ளது. எனவே நடந்து முடிந்த வேலைகளுக்கு பில் கொடுக்கவும், பாதி முடிந்த வேலைகளை முடிக்கவும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு உள்ளாட்சியில் எந்த ஒப்பந்தப் பணிகளோ, வேலைகளோ நடக்கவில்லை. எனவே அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் ஊராட்சியில் 8 MVA மின்மாற்றி மற்றும் A.குமாரமங்கலம் ஊராட்சியில் 10 MVA மின்மாற்றி அமைத்துத் தர வேண்டும்.

### புதிய அரசு மகளிர் கலை - அறிவியல் கல்லூரி அமைத்திடுக!

உளுந்தூர்பேட்டை தொகுதியில் புதிதாக ஒரு அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டை தொகுதி, அங்கனூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகம் கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தித் தர வேண்டும். விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட அரசூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, காட்டு எடையார் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் கட்ட வேண்டும். உளுந்தூர்பேட்டை நகராட்சியில் இயங்கிவரும் நூலகத்திற்கு விரிவுபடுத்தப்பட்ட புதிய நூலக கட்டடம் அமைத்திட வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, பொதுப் பணித் துறையின் நீர்வளப் பிரிவு துணைப் பொறியாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் அமைத்துத் தர வேண்டும். உளுந்தூர்பேட்டையில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமையான கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, களமருதூர் ஊராட்சியில் தனியார் கட்டடத்தில் இயங்கிவரும் காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலையக் கட்டடம் மற்றும் காவலர் குடியிருப்பு அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சார்ந்த பிடாகம் ஊராட்சியை பேரூராட்சியாக தரம் உயர்த்திட வேண்டும். உளுந்தூர்பேட்டை ஒன்றியம், வீரமங்கலம் to பின்னல்வாடி சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட தென்மங்கலம் ஊராட்சியைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் அவர்களை அருகில் உள்ள இருவேல்பட்டு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய சேவை எல்லையில் சேர்த்து சிகிச்சை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.

உளுந்தூர்பேட்டை அரசு வட்டார மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சை பிரிவில் டயாலிசிஸ் செய்யும் வசதி மற்றும் MRI ஸ்கேன் எடுக்கின்ற வசதி போன்றவற்றை வழங்கிட வேண்டும். மேலும் இதற்குரிய மருத்துவர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களையும் வழங்கிட வேண்டும்.

### புறநோயாளிகள் பிரிவிற்கு தனி கட்டடம் வேண்டும்!

உளுந்தூர்பேட்டை தொகுதி, கூவாகம் ஊராட்சியை மையமாக வைத்தும், நெய்வனை ஊராட்சியை மையமாக வைத்தும் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தர வேண்டும். களமருதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திட வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் (O.P) பிரிவிற்கு தனி கட்டடம் அமைத்துத் தர வேண்டும். சேந்தமங்கலம், மாரனோடை, பரிக்கல், களமருதூர், நெமிலி, வேலூர், பாண்டூர், பு.மாம்பாக்கம், மதியனூர், மட்டிகை, ஈஸ்வரகண்டநல்லூர், கள்ளக்குறிச்சி ஆகிய ஊராட்சிகளில் உள்ள கிராம துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியம், அரும்பட்டு கிராமத்தில் கட்டப்பட்டுள்ள சமத்துவபுரம் குடியிருப்பில் குடியிருக்கும் மக்களுக்கு வழங்கிய 5 சென்ட் வீட்டு மனை பட்டாவை கணக்கில் ஏற்ற முடியாத நிலை உள்ளது. எனவே, அரசு அதை வருவாய்க் கணக்கில் பதிவுசெய்து, பட்டா வழங்க வேண்டும்.

### மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைத்திடுவீர்!

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஒன்றியம், ஆத்தூர் ஊராட்சி ஆதிதிராவிடர் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதால், புதியதாக ஒரு மோட்டார் பம்ப் செட்டுடன் ஆழ்துளை கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைத்துத்தர வேண்டும். வேலூர் ஊராட்சியில், வேலூர் கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ஆத்தூர் ஊராட்சியில் பிள்ளையார் குப்பத்தில் 1,00,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, களமருதூர் ஊராட்சி, களமருதூர் இஸ்லாமியர் குடியிருப்பு பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். கிள்ளனூர் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆதனூர் ஊராட்சி, கிளப்பாளையம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்ட T.குளத்தூர் ஊராட்சி, பூசாரிப்பாளையம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசூர் ஊராட்சி, துலங்கம்பட்டு கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மின் மோட்டாருடன்கூடிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். ஆனத்தூர் ஊராட்சி, தொட்டுமேடு கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மின் மோட்டாருடன்கூடிய ஆழ்துளைக் கிணறு மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆனத்தூர் ஊராட்சி, ஆட்டுக்காரன் திட்டு பகுதியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைத்திட வேண்டும். திரு வெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியம், மேல் தனியாளம்பட்டு ஆதிதிராவிடர் பகுதிக்குச் செல்லும் சாலையை தார்ச்சாலையாக அமைத்து தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, கீரிமேடு ஊராட்சி, மணல்மேடு-அரும்பட்டு சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும். நெடுமானூர் ஊராட்சி, புத்தமங்கலம் முதல் நெடுமானூர் வரை செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலையை தார்ச்சாலையாக அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, பு. மலையனூர் கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும். கரடிப்பாக்கம் ஊராட்சி, கரடிப்பாக்கம் ஆதிதிராவிடர் பகுதியில் புதிய அங்கன்வாடி கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

உளுந்தூர்பேட்டை தொகுதி, சித்தானங்கூர் ஊராட்சியில் பழையபட்டணம், மாமாந்தூர் ஆகியவற்றை ஒரு ஊராட்சியாகவும், சித்தானங்கூர். குயிலாபாளையம், சித்தானங்கூர் ஆதிதிராவிடர் பகுதி ஆகியவற்றை ஒரு ஊராட்சியாகவும் பிரித்து, இரண்டு ஊராட்சிகளாக அமைத்துத் தர வேண்டும்.

தொடர்ச்சி 8ஆம் பக்கம்